/பதிவுத்துறை/

அனுப்புநர்

பதிவுத்துறைத்தலைவர்,
பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
சென்னை-28.

பெறுநர்

அனைத்து
துணைப்பதிவுத்துறைத்தலைவர்கள்,
அனைத்து மாவட்டப்பதிவாளர்கள்,
அனைத்து சார்பதிவாளர்கள்.

கடிதஎண்.11946/ஜி2/2018-2, நாள் 14.03.2018.

அய்யா/அம்மையீர்,

பொருள் : இந்து திருமண விதிகள், 1967ல் விதி 13-Aன் கீழ் திருத்தம் தொடர்பாக அனுப்பப்பட்ட சுற்றறிக்கை மீதான தெளிவுரை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை : 1.பதிவுத்துறைத்தலைவரின் சுற்றறிக்கை எண்.34612/ஜி2/2014, நாள் 7.6.2016.
2.பதிவுத்துறைத்தலைவரின் சுற்றறிக்கை எண்.39223/ஜி2/2017-2, நாள் 28.09.2017.

****

i. இந்து திருமண சட்டம், 1955 மற்றும் இந்து திருமண விதிகள் 1967-ன் படி, திருமணப்பதிவுகள் பதிவு அலுவலர்களால் மேற்கொள்ளப்படுகின்றன.

ii. இந்து திருமண விதிகள் 1967-ல் விதி 13A-ன் கீழ் பெயர், வயது, தேதி மற்றும் முகவரி ஆகியவற்றில் மட்டுமே திருத்தம் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

iii. மனுதாரரால் விண்ணப்பத்தில் சரியாக விவரங்கள் பூர்த்தி செய்யப்பட்டு, சான்றில் தட்டச்சு பிழை ஏற்படினும், மனுதாரரால் விண்ணப்பத்தில் தவறான விவரங்கள் பூர்த்தி செய்யப்பட்டு, ஆதார சான்றாவணங்களில் அளிக்கப்படும் விவரங்களுடன் சரிவர ஒப்பீடு செய்யப்படாமல் அளிக்கப்படும் திருமணச்சான்றுகள், பிற்காலத்தில் சான்றாவணங்களின் அடிப்படையில் திருத்தம் கோரப்பட்டாலும், மேற்படி இந்து திருமண விதி 13A-ன் கீழ் பதிவுத்துறைத்தலைவர் அவர்கள் மட்டுமே திருத்தம் செய்திட விதிகளில் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

RealEstate Verified

iv. திருத்தம் கோரி மாவட்டப்பதிவாளர்களிடமிருந்து பல்வேறு மனுக்கள் பரிந்துரைக்கப்பட்டு இவ்வலுவலகத்தில் பெறப்படுகின்றன. மேற்படி கருத்துருக்கள் தொடர்பாக பதிவு அலுவலர் திருமணப்பதிவின் போது மேற்கொள்ள வேண்டிய பதிவு நடைமுறைகள் தொடர்பாக பார்வை (1) மற்றும் (2)-ல் கண்ட சுற்றறிக்கை வாயிலாக தெளிவுரைகள் வழங்கப்பட்டன.

v. மேலும் மணமக்கள்/மணமக்கள் பெற்றோர் ஆகியோரின் பெயர்/பிறந்த தேதி திருத்தம் கோரி வரப்பெறும் கருத்துருக்கள் சார்பதிவாளர் வழி மாவட்டப்பதிவாளரிடம் பெறப்பட்டு அங்கிருந்து பதிவுத்துறைத்தலைவருக்கு முகவரிக்கப்படுகின்றன, இதனால் ஏற்படும் கால விரயத்தை தவிர்க்கும் பொருட்டு மேற்படி சுற்றறிக்கைகளில் பதிவு நிலையிலேயே திருத்தங்கள் சரிபார்த்திடவும், திருத்தம் கோரும் நிலை எழாவண்ணம் பதிவு செய்திடவும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

vi. பார்வை இரண்டில் காணும் சுற்றறிக்கையின் தொடர்ச்சியாக கீழ்க்கண்ட தெளிவுரைகள் வழங்கப்படுகிறது,

வ.எண்.	பார்வை இரண்டில் காணும் சுற்றறிக்கையில் உள்ளபடி	தற்போது வழங்கப்படும் தெளிவுரை
1.	மணமக்கள், பெற்றோர் மற்றும் சாட்சிகளின் அடையாள ஆதார ஆவணமாக ஏற்கெனவே பரிந்துரைக்கப்பட்ட ஆவணங்களுடன் தற்போது ஆதார் அட்டையையும் ஒரு அடையாள (Identity) ஆவணமாக ஏற்று பதிவு மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது. அரசு சேவை பெற இதனை ஆதாரமாக கோரலாம் என The Aadhaar (Targetted Delivery of Financial and other Subsides benefits and Services) Act, 2016 பிரிவு-7ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதனை குடியுரிமை	ஆதார் அட்டையை ஓர் அடையாள சான்றாவணமாக ஏற்றுக்கொள்ளலாமேயன்றி ஆதார் அட்டை திருமணப்பதிவிற்கு **கட்டாயம் இல்லை.**

Verified eSeva Re

	ஆதாரமாகவோ அல்லது இருப்பிட ஆதாரமாக ஏற்க இயலாது என மேற்படி சட்ட பிரிவு-9ல் எடுத்துரைக்கப்பட்ட நிலையில் இதனை அடையாள (Identity) ஆதாரத்திற்கான ஆவணமாக மட்டுமே ஏற்க தெரிவிக்கப்படுகிறது.	
2.	மணமக்களின் பெற்றோரது பெயர்கள் மற்றும் முகவரிகளை சரி பார்க்கும் பொழுது, அவர்கள் தாக்கல் செய்யும் ஆதார ஆவணங்களில் கண்டுள்ள பெயர் மற்றும் முதலெழுத்தும் (Name and Initial) விண்ணப்பத்தில் பூர்த்தி செய்யப்பட்ட பெயர் மற்றும் முதலெழுத்தும் (Name and Initial) மற்றும் முகவரிகள் ஒத்துள்ளதா (Identical) என பதிவு அலுவலர்கள் நன்கு பரிசீலித்த பின்னரே பதிவு மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தப்படுகிறது.	**மணமக்கள் மற்றும் சாட்சிகளின்** பெயர்கள் மற்றும் முகவரிகளை சரி பார்க்கும் பொழுது, அவர்கள் தாக்கல் செய்யும் ஆதார ஆவணங்களில் கண்டுள்ள பெயர் மற்றும் முதலெழுத்தும் (Name and Initial) விண்ணப்பத்தில் பூர்த்தி செய்யப்பட்ட பெயர் மற்றும் முதலெழுத்தும் (Name and Initial) மற்றும் முகவரிகள் ஒத்துள்ளதா (Identical) என பதிவு அலுவலர்கள் நன்கு பரிசீலித்த பின்னரே பதிவு மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தப்படுகிறது.
3.	மணமக்களின் பெற்றோர் யாரேனும் இறந்து விட்டதாக விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் நிலையில், இறந்தவரின் அசல் இறப்புச் சான்றை சரிபார்த்து அதன் நகல் பெறப்பட்டு கோர்வை செய்யப்படவேண்டும்.	மணமக்களின் பெற்றோர் யாரேனும் இறந்து விட்டதாக விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் நிலையில், இறந்த பெற்றோரின் பெயருக்கு முன் Late என குறிப்பிட்டால் போதுமானது. **இறப்புச்சான்று கோரப்பட வேண்டியதில்லை.**

Verified. RedFort ™

4.	மேலும் மணமக்களில் யாரேனும் ஒருவர் கணவர் அல்லது மனைவியை இழந்தவர் (Widow/Widower) என விண்ணப்பத்தில் குறிப்பிடும் நிகழ்வில், இறந்த கணவர்/மனைவியின் இறப்புச் சான்று (Deceased Spouse's Death Certificate) அசலை சரிபார்த்து அதன் நகலை கண்டிப்பாக பெற்று கோர்வை செய்த பின்னரே பதிவு மேற்கொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.	மாற்றம் ஏதும் இல்லை.

மேற்படி சுற்றறிக்கையை அனைத்து பதிவு அலுவலர்களும் தவறாது கடைப்பிடிக்க அறிவுறுத்தப்படுகின்றனர். இச்சுற்றறிக்கை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதலை சார்பதிவாளர்கள் மாவட்டப்பதிவாளர்களுக்கும், மாவட்டப்பதிவாளர்கள் மண்டல துணைப்பதிவுத்துறைத்தலைவர்களுக்கும், துணைப்பதிவுத்துறைத்தலைவர்கள் ஒருங்கிணைந்த ஒப்புதல் அறிக்கையினை இவ்வலுவலகத்திற்கும் அனுப்பிட கோரப்படுகின்றனர்.

14/3/2018

பதிவுத்துறைத்தலைவர்.

Verified RealEstate TM